# திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு
## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் செப்பனியா நூலிலிருந்து வாசகம் 3: 14-17,

எசா 12: 2-3. 4. 5-6,

திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4: 4-7,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 3: 10-18

## திருப்பலி முன்னுரை:

மகிழ்ச்சிக்குரியவர்களே,

திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அண்மையில் உள்ளதை நினைத்து அகமகிழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமது மகிழ்ச்சியை மட்டுமல்ல, நம்மிடம் உள்ள அனைத்தையுமே பிறரோடு பகிர்ந்து வாழ திருமுழுக்கு யோவான் நம்மைத் தூண்டுகிறார். ”இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்துகொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்.“ தூய ஆவி என்னும் நெருப்பால் நமக்கு திருமுழுக்குக் கொடுக்கும் வலிமைமிக்க ஆண்டவரின் வருகைக்காக நாம் காத்திருக்கிறோம். அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிக்கப்படும் பதராக இல்லாமல், அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படும் கோதுமையாக வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**மகிழ்ச்சி தருபவராம் இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உமது திருமகனின் அருளால் நிரப்பி, நிலை வாழ்வில் நம்பிக்கை கொண்டவர்களாய் உம்மில் மகிழ்ந்திருக்க உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**புனிதத்தின் ஊற்றாம் இறைவா,**

எம் நாட்டு மக்களை தவறான வழியில் வழிநடத்தி, உமது நற்செய்தி பரவ தடையாக இருக்கும் உண்மைக்கு எதிரான அமைப்புகள் அழிந்தொழிய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**எம்மைத் தேடிவந்த அன்பே எம் இறைவா,**

கடந்த சில வாரங்களில் நிகழ்ந்த இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காவும், அவர்கள் விரைவில் தங்களின் இயல்பு வாழ்க்கையைத் தொடரவும், புலம்பெயர்ந்தோர் மற்றம் குடிபெயர்ந்தோர் மற்றவர்களால் ஏற்றுகொள்ளப்பட்டுப் புனர்வாழ்வுப் பெற்றிட உமது இரக்கத்தை அவர்களில் மேல் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எதிர்பார்ப்பின் நம்பிக்கையான எம் இறைவா!**

இத்திருவருகைக்காலத்தில் எங்கள் இளைய சமுதாயம் உம்மைப் போல் தமக்கு அடுத்திருப்போரை ஏற்று அவர்கள் வாழ்வு மேன்படவும், அறிவுப்பூர்வமான உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் செய்து அதன் மூலம் தங்கள் கரடுமுரடான, கோணலான வாழ்க்கை முறையை மாற்றிடத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**குணம் அளிப்பவராம் இறைவா,**

உலகின் இன்பத்தை நாடி தீய நாட்டங்களுக்கும், தீங்கு விளைவிக்கும் கெட்ட பழக்கங்களுக்கும் அடிமைகளாகி தவிப்போர், நிலையான மகிழ்ச்சி தருபவராம் உம்மை சரணடைய வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

இன்றைய உமது அருள்வாக்கு வழியாக நீர் வெளிப்படுத்தும் உமது, விருப்பத்தையும், சித்தத்தையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு உம்மோடும், எம் உறவுகளோடும் ஒப்புரவாகி, மனமாற்றமடைந்து உமது விருப்பப்படி நடக்க வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.